

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலம், காந்தி ரோடு, முடிச்சூர் ரோடு, பெருங்களத்தூர் வரை மாநில நெடுஞ்சாலை நடுவில் ரூ.104.50 இலட்சம் மதிப்பீட்டி புதியதாக அமைக்கப்பட்டுள்ள எல்.இ.டி. மின் விளக்குகளை கழகப் பொருளாளர், நாடாளுமன்ற கழக குழு தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தபோது எடுத்த படம். உடன் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர், மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, மண்டல குழுத் தலைவர்கள், பகுதி கழக செயலாளர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், பகுதி கழக செயலாளர் எஸ்.சேகர் எம்.சி., பகுதி அவை தலைவர் டி.ஆர்.கோபி எம்.சி., மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக தோழர்கள் உடனிருந்தனர்.

இந்த ஆண்டு; இந்தியாவின் உணர்வைப் பிரதிபலிக்கும் வகையில் –

# பிரிவினைக் கொள்கைகளைத் தகர்த்தெறியட்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – குடியரசு நாள் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஜன. 27-**

**இந்தியத் திருநாட்டின் 75வது குடியரசுத் திருநாளையொட்டி, நேற்று விடுத்த சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "இந்த ஆண்டு; இந்தியாவின் உணர்வைப் பிரதி பலிக்கும் வகையில் அனைவரையும் உள்ளடக்கிய நோக்கைத் தழுவி, பிரிவினைக் கொள்கைகளைத் தகர்த்தெறியட்டும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

சக குடிமக்கள் அனைவருக்கும் குடியரசு நாள் வாழ்த்துகள்!

நமது இந்திய ஒன்றியத்தின் அடையாளமாக விளங்கும் பன்மைத்துவம், சமத்துவம் மற்றும் ஒற்றுமை ஆகியவற்றின் மீதான நமது உறுதிப்பாட்டினைப் புதுப்பித்துக் கொள்வோம்.

இந்த ஆண்டு; இந்தியாவின் உணர்வைப் பிரதிபலிக்கும் வகையில் அனைவரையும் உள்ளடக்கிய நோக்கைத் தழுவி, பிரிவினைக் கொள்கைகளைத் தகர்த்தெறியட்டும்!

இவ்வாறு தமது வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் திருவண்ணாமலை தெற்கு மாவட்டம் கலசப்பாக்கத்தில் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன் தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் தலைமைக் கழக சொற்பொழிவாளர் எழும்பூர் மோ.கோபிநாத் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் மாநில மருத்துவ அணி இணை செயலாளர் மருத்துவர் எ.வ.வே.கம்பன். சி.என்.அண்ணாதுரை. எம்.பி., ஒன்றிய கழக செயலாளர்கள் சுப்பிரமணியன், சுந்தரபாண்டியன், கேசவன், ஆறுமுகம், சேகர், அன்பரசி, ராஜசேகர், பாலசுப்பிரமணி, மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய பேரூர், கிளை, கழக நிர்வாகிகள், ஒன்றிய குழு தலைவர்கள், துணைத் தலைவர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் அனைத்து அணியின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

75 ஆண்டுகளாக மொழி – இனம் –

# கலாச்சாரத்தைப் பாதுகாத்து வரும் ஒரே இயக்கம் தி.மு.க.!

## அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பேச்சு!



சிவகங்கை, ஜன. 27 -

சிவகங்கை மாவட்டத்தில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் சிவகங்கை, திருப்பத்தூர், மானாமதுரை, காரைக்குடி, ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் கலந்துகொண்டு சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும் , கூட்டுறவு த்துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் பேசியதாவது.

பேரறிஞர் அண்ணா அவர்களால்75ஆண்டுகளுக்கு முன் திராவிட முன்னேற்ற கழகம் துவங்க ப்பட்டது. அண்ணா அவர்கள் கழகத்தை துவக்கிய போது அரசியலுக்கு வர வேண்டும் என்பதற்காக துவங்கப்படவில்லை. சமுதாய முன்னேற்றத்திற்காக துவக்கப்பட்டது. மொழி ,இனம் சமுதாயம், ஆகியவற்றை பாதுகாப்பதற்கு துவக்கப்பட்டது. பின்னர் நாளடைவில் அரசியலில் ஈடுபட்டு மக்கள் பணியாற்ற வேண்டும் என்பதற்காக தேர்தலில் போட்டியிட்டது. அரசியலில் ஈடுபட்டாலும் கொள்கை மாறாமல் இன்றுவரை அந்த கொள்கை வழி ஆட்சி நடைபெற்று வருகின்றது. ஆட்சியில் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி கொள்கைகளை திராவிட முன்னேற்ற கழகம் என்றுமே கைவிட்டதில்லை இந்தியாவில் கொள்கைகளுடன் செயல்படும் ஒரே இயக்கம் தி.மு.க. தான் என்பதில் நாம் அனைவரும் பெருமைப்பட வேண்டிய விஷயமாகும்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் வழியில் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் கழகத்தின் கொள்கையினை இன்று வரை காப்பாற்றி வருகிறார். மொழி, இனம், சமுதாயம் பாதுகாக்கப்பட வேண்டும். கலாச்சாரங்கள் பின்பற்றப்பட வேண்டும் என்பதில் முதல்வர்அவர்கள் உறுதியாக உள்ளார்கள். உலக அளவில் மொழியை பாதுகாப்பதில் இனத்தை பாதுகாப்பதில் இன்று முதல்வர் அவர்கள் தனி கவனம் செலுத்தி பாதுகாத்து வருகிறார். மொழிக்காக உயிர்நீத்த தியாகிகளின் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடத்தும் ஒரே தகுதி நமது இயக்கம் ஒன்றுக்கு தான் உண்டு. மற்றவர்கள் அவ்வப்போது நடத்துவார்கள். சிறிது காலம் நடத்தாமல் விட்டுவிடுவார்கள் .ஆனால் நாம் தொடர்ந்து வீரவணக்க நாள் பொதுக்கூட் டத்தை மொழிப்போர் தியாகிகளுக்காக நடத்தி வருகின்றோம். இதன் மூலம் இன்றைய இளைஞர் சமுதாயத்தினர் கழகத்தின் வரலாறு பற்றியும் மொழிக்காக உயிர் நீத்த தியாகிகளின் வரலாறு பற்றியும் தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பாக அமையும். இத்தகைய மொழிப்போர் தியாகிகளின் உணர்வுகளை பாதுகாப்பதில் தி.மு.கழகம் உறுதியாக உள்ளது என்பதில் நாம் அனைவரும் மகிழ்ச்சி அடைய வேண்டும். மாணவர்கள் இளைய தலைமுறையினர் கழகத்தின் முழுமையான வரலாறுகளை தெரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார்.

75வது குடியரசு தின விழாவை முன்னிட்டு – திருவொற்றியூர்

# ஜெயகோபால் கரோடியா பள்ளியில் தேசியக்கொடி!

## கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. ஏற்றிவைத்து பரிசு – இனிப்பு வழங்கினார்!

சென்னை, ஜன.27-

திருவொற்றியூர் ஜெய்கோபால் கரோடியா அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நாட்டின் 75-ஆம் ஆண்டு குடியரசு தின விழா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

மாநில மீனவர் அணி துணைத்தலைவர் திருவொற்றி யூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கிய குடியரசு தின நிகழ்ச்சி பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமதி வெற்றிச்செல்வி வரவேற்பில், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் வி.இராமநாதன், பள்ளியின் ஆலோசகரும், மாமன்ற உறுப்பினருமானா கே.பி.சொக்கலிங்கம் ஆகியோரின் வாழ்த்துரையில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் மாநில மீனவர் அணி துணை தலைவர் கே.பி.சங்கர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சியை கண்டு களித்து, மாநில அளவில் நடைபெற்ற கலைத்திருவிழாவில் கலந்து கொண்டு களி மண் சிற்ப பிரிவில் முதலிடம் பிடித்த மாணவன் ராகுல், சிலம்பப் போட்டியில் மாவட்ட அளவில் தங்கப்பதக்கம் வென்றுள்ள ஸ்ரீகா, ஜனார்த்தனன் ஆகியோரை வாழ்த்தி சிறப்பு பரிசு வழங்கினார்.

தொடர்ந்து பேசிய திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர், திராவிட மாடல் அரசு மாணவர்களுக்கு செய்துவரும் நலத்திட்டங்களை எடுத்துரைத்து மாணவர்கள் ஒழுக்கத்திலும் கல்வியிலும் நாடு பற்றோடு சிறந்து விளங்க வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.

மேலும் சுதந்திர தின நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு சிக்கன் பிரியாணி மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள் எஸ்.டி.சங்கர், ரமேஷ், வில்ஷன், எல்லப்பன், அலெக்ஸ், செல்வம், மாமன்ற உறுப்பினர் பானுமதி சந்தர், வட்ட செயலாளர்கள் இரா.சந்தர், ஏகா.கார்த்திகேயன், கழக பேச்சாளர் வாசு கருணாநிதி, மாவட்ட பிரதிநிதிகள் கே.கார்த்திகேயன், பி.எஸ்.சைலஸ், எஸ்.ஸ்டாலின், சந்தானகிருஷ்ணன், புழல் ஜெகதீசன், பன்னை.சந்திரசேகர், கொசப்பூர் ரவிச்சந்திரன், விமல்தாஸ், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் பாலஉமாபதி, எஸ்.விஜயராகவன், கலைஞர் நகர் பாபு, எஸ்.கே.இளங்கோ, கே.எஸ்.ஆனந்தன், மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் பிரெட் சுரேஷ், மகிலன், சீனிவாசன், சுந்தரம், தங்கவேல், டைலர்மணி, கோபி, மாரியப்பன், வாழப்பாடி செந்தில், சோமசுந்தரம், ஜெ.ஆர்.டி.சேகர், பரணிகுமார், கணேசன், எம்.கே.எஸ்.கார்த்திக், பகுதி மீனவரணி எஸ்.செல்வம், மகேந்திரன், குமரன், எம்.எல்.வேலன், ராஜேந்திரன், பிரேம்குமார், ரவி, அன்பு, இப்ராகிம் பாய், சண்முகம், மாரியப்பன், மணலி சுரேஷ், கார்கில் நகர் கஜா, இளங்கோ, அன்புச்செல்வன், கேசவன், ஜோசப், புனிதா, சந்திரலேகா, பவானி, ஆசிரியர்கள், மாணவர்கள், கழகத் தோழர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

இறுதியாக உதவித லைமை ஆசிரியை திருமதி. சித்ரா நன்றி கூறினார்.




திருவள்ளூர் மேற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் திருவள்ளூரில் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் கழக கொள்கை பரப்பு செயலாளர் திண்டுகல் லியோனி மொழிப்போர் தியாகிகள் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி வீரவணக்க நாள் உரையாற்றினார். உடன் தலைமை கழக பேச்சாளர் புலவர் சாமி நாகப்பன், தலைமை செயற்கை குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, நகர செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், நகர மன்ற தலைவர் உதய மலர் பாண்டியன், மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.திராவிட பக்தன், ஆர்.டி.இ.ஆதிசேஷன், ஒ.ஏ.நாகலிங்கம், ஜெயபாரதி, மாஸ்டர் குருதாஸ். ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி.கிஷோர், சுப்பிரமணியம், இராஜேஸ்வரி ரவீந்திரநாத், மாவட்ட மாணவர் அணி நிர்வாகிகள் முரளி சேனா, லிங்கேஷ்குமார், கு.பிரபாகரன், மா.கோபிநாத், மு.எழிலரசன், ச.அர்ச்சனா உள்பட ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் நிர்வாகிகள் உள்ளனர்.

சபா .இராஜேந்திரன் எம்.எல்.ஏ. தலைமை!

# நெய்வேலியில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## முன்னாள் அமைச்சர் – தாட்கோ தலைவர் உ.மதிவாணன் சிறப்புரை!

கடலூர், ஜன. 27 -

நெய்வேலி நகர திமுக மற்றும் தொ.மு.ச சார்பில் மொழி போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் வட்டம் 25 தொமுச வளாகத்தில் நடைபெற்றது.

நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராஜேந்திரன் தலைமை தாங்கினார். நகர செயலாளர் வி.பக்கிரிசாமி வரவேற்புரையாற்றினார்.முன்னாள் அமைச்சரும் ,ஆதிதிராவிடர் வீட்டு வசதி, மேம்பாட்டு கழக தலைவர் உ.மதிவாணன், தலைமை கழக பேச்சாளர் எஸ். கே.ஸ்ரீராம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் சா.இராசவன்னியன், பண்ருட்டி ஒன்றிய பெருந்தலைவர் சபா .பாலமுருகன், மாவட்டப் பொரு ளாளர் ஜி.தண்டபாணி, ஒன்றிய கழக செயலாளர் குணசேகரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் பொ.புகழேந்தி, தொமுச தலைவர் பா.திருமாவள வன், பொருளாளர் ஐயப்பன், மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் மு.சு. பொன்முடி, நகர பொருளாளர் ஜே.மதியழகன், நகர துணை செயலாளர்கள் இராம.கருப்பன், கே. செந்தமிழ்செல்வன், கோமதி செந்தில்குமார், மாவட்டப் பிரதிநிதி ஏ. நாசர், ஒன்றிய துணைசெயலாளர் சுமதி நந்தகோபால், முன்னாள் தொமுச நிர்வாகிகள் சிவந்தான்செட்டி,

வீர.இ ராமச்சந்திரன், வி.குருநாதன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆ.சதாம், மாவட்ட தொண்டரணி தலைவர் மணிவண்ணன், தொ.மு.ச. காண்டிராக்ட் சங்க செயலாளர் கனக.பழனிவேல், வட்டம் 21 சந்திரசேகர், மாணவரணி ரமேஷ், கிளைக் கழக செயலாளர்கள், தொமுச துணைத் தலைவர்கள், பகுதி செயலாளர்கள் ,கழக நிர்வாகிகள்சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்டப் பிரதிநிதி பா. இரவிச்சந்திரன் நன்றி கூறினார்.

பி.எஸ்.சந்துரு தலைமையில் மாதவரம் வடக்கு பகுதி

# 23 வது வட்டம் புழல் காந்தி தெருவில் குடியரசு தின விழா!

## புழல் எம்.நாராயணன் பங்கேற்பு!

சென்னை, ஜன. 27

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 23 வது வட்டத்தில் அடங்கிய மகளிர் சுய உதவி குழுக்கள் சார்பில் குடியரசுதின விழா கொண்டாடப்பட்டது.

மாதவரம் 23 வது வட்ட செயலாளர் பி.எஸ்.சந்துரு தலைமையில் வட்ட துணைச் செயலாளர் மேக்சிலா உதயகுமார் முன்னிலையில் நடைபெற்ற இந்த விழாவில் 200 க்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவி குழு தாய்மார்கள் கலந்து கொண்டனர்.

புழல் காந்தி தெருவில் அமைந்த டாக்டர் அம்பேத்கர் நற்பணி மன்றத்திற்கு அருகே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். குடியரசு தினத்தை முன்னிட்டு அமைக்கப்பட்டு இருந்த கொடிக்கம்பத்தில் தேசியக்கொடி ஏற்றி மரியாதை செலுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் வட்டக் கழக நிர்வாகிகள் டி. நெல்சன்ராஜ், வே.ரவி, க.ந.க.சைமன்,

டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் மன்ற நிர்வாகிகள் உதயகுமார், சகாயராஜ், ஸ்டாலின், அசோக்குமார், திருப்பதி, கௌஷிக், மணி, செந்தில், ரவி,

வானவில் மகளிர் சுய உதவி குழுவைச் சார்ந்த மேக்சியில காவியா, தேன்மொழி, அமல், கவி,

கன்மலை மகளிர் குழுவைச் சேர்ந்த ஜமீனா, தேன்மொழி நிர்மலா குழுவை சார்ந்த திவ்யா, தமிழன்னை, சாரதா, வல்லமை மகளிர் குழுவைச் சார்ந்த ரத்னா, ஷர்மிளா, மாரியம்மன், வெற்றி மகளிர் குழுவைச் சேர்ந்த சுமதி, விஜயலட்சுமி, பத்மினி, சாகசப் பறவைகள் குழுவை சார்ந்த நிவேதிதா, ஏஞ்சல், இந்திராணி, சுமதி உள்ளிட்ட மகளிர் செய்வது குழுக்களின் ஊக்குனர்கள், பிரதிநிதிகள், உறுப்பினர்கள் என்று 200 க்கும் மேற்பட்ட மகளிர் செய்வதை குழுவினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முன்னதாக குடியரசு தினத்தை முன்னிட்டு கலந்து கொண்ட பொதுமக்கள் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.



சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 23 வது வட்டத்தில் அடங்கிய மகளிர் சுய உதவி குழுக்கள் சார்பில் புழல் காந்தி தெருவில் வட்டச் செயலாளர் பி.எஸ்.சந்துரு தலைமையில் வட்ட துணைச் செயலாளர் மேக்சிலா உதயகுமார் முன்னிலையில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் கலந்து கொண்டு தேசியக்கொடி ஏற்றி வைத்து இனிப்பு வழங்கினார். வட்ட நிர்வாகிகள் டி.நெல்சன் ராஜ், வெ.ரவி, க.ந.க.சைமன் உள்ளிட்ட மகளிர் சுய உதவிகுழு தாய்மார்கள் திரளாக கலந்து கொண்டனர்.